பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஆண்டு மார்கழி மீ 29 உ ஞாயிற்றுக்கிழமை (13-01-2011) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 48

கிளிநொச்சியில் குண்டு வீச்சு!

10 பொதுமக்கள் உயிரிழப்பு!!

அந்த நேரம்: ஜனவரி 16 காலை 10-30

குவைத்தில் இருந்து ஈராக் படைகள் வெளியேறு நாள் விதித்த ஜனவரி 15 காலைக் கெடு இலங்கை நேரப்படி ஜனவரி 16 காலை 10-30 மணிக்கு முடிவடைகிறது.

அமெரிக்க நேரப்படி ஜனவரி 15 நள்ளிரவு காலைக்கெடு குவைத்தில் ஜனவரி 16 காலை 8 மணிக்கு முடிவடைகிறது.

அமெரிக்காவின் இராணுவத் தாக்குதல், அமெரிக்க நேரப்படியே ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சடலங்கள் சிதறிக் கிடக்கின்றன சனக்கூட்டம் மீது நடந்த தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜனவரி 13

கிளிநொச்சி நகரில் நேற்று மாலை 4 மணியளவில் சனக்கூட்டத்தின் மீது நடத்தப்பட்ட கண்மூடித்தனமான குண்டு வீச்சில் பத்துக்கும் அதிகமான பொதுமக்கள் உயிரிழந்தனர். பத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

கிளிநொச்சி நகரில் பஸ் நிலையம், பொலீஸ் நிலையம் ஆகியவை இருந்தஇடங்களில் — சன நெரிசலாக இருந்த வேளையில்—இரண்டு குண்டுகள் வீசப்பட்டன.

குண்டு வீசினால் பத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்ததாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

அப்பகுதியில் பல இடங்களில் பொதுமக்களின் சடலங்கள் சிதறிக் கிடந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

எண்ணை லொறி ஒன்று இந்தத் தாக்குதலில் முற்றாக எரிந்து நாசமானது. அருகில் மற்றொரு லொறி பெரும் சேதமுற்றுக் கிடந்தது

இந்த லொறிகளுக்குள் பலரின் சடலங்கள் கிடப்பதாகவும் தெரிய வந்தது.

எம் டி 90 ரக மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரின் சடலம் மோட்டார் சைக்கிளுக்குப் பக்கத்தில் கிடந்தது.

(2 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

தமிழருக்கு எதிரான போர் இல்லை என்று சொல்லிச் சினம்.....!

புங்குடுதீவுக் கடலில் பாரிய பீரங்கிப்படகு

புங்குடுதீவு கடற்பகுதியில் கடந்த வியாழக்கிழமை மரலையில் இருந்து பாரிய பீரங்கிப் படகு ஒன்று நங்கூரமிடப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரிக்கு எதிரே தென் கடற் பிராந்தியத்தில் கரையில் இருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் பீரங்கிப் படகு காணப்படுகிறது.

இதனை அடுத்து கடற்கரைப் பகுதியில் தங்கியிருந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த மக்கள் பீதி காரணமாக வெளியேறத் தொடங்கியுள்ளனர். (ஒ-131)

4 படையினர் பலி

கொழும்பு, ஜன 13

விடுதலைப் புலிகளுடனான மோதல்களில் அரசுப் படையினர் நால்வர் கொல்லப்பட்டனர்.

— இப்படி கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன என்று இந்திய வானொலி அறிவித்தது.

வவுனியாவில் இரண்டு படையினரும் வடபகுதியில் மேலும் ஒரு படையினரும் உயிரிழந்தனர் என்று அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(ஒ எ)

காலை நடந்த தாக்குதலில் கிறிஸ்தவ தேவாலயம் சேதம்

யாழ்ப்பாணம், ஜன.13

கிளிநொச்சி நகரப் பகுதியில் –பஸ் டிப்போவுக்குச் சமீபமாக நேற்றுக்காலை 9 மணியளவில் பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

இந்தத் தாக்குதலுக்கு இலக்காகி அப்பகுதியில் நின்ற இருவர் காயமடைந்தனர்.

தேவாலயம் ஒன்று பலத்த சேதமடைந்தது.

கிளிநொச்சி நகரப் பகுதியைச் சுற்றி வட்டமிட்ட இரு பொம்மர்கள் பஸ்டிப் போவுக்கு முன்பாக உள்ள ஒழுங்கைப் பகுதியில் திடீர் திடீரென 3 குண்டுகளை வீசித் தாக்கின

இத்தாக்குதலை அடுத்து வடக்குப் பக்கமாகச் சென்ற பொம்மர்கள் 30 நிமிடங்கள் கழித்து வந்து சுற்றிச் சுற்றி மீண்டும் அதே சுற்றாடலில் குண்டுகளை வீசின.

இந்தத் தாக்குதல்களின் போது காயமடைந்த இருவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் விவரம் வருமாறு:-

செபமாலை பிரான்சிஸ் (41 வயது) சேந்தாங்குளம். பாக்கியநாதர் குமார் (18 வயது) இளவாலை ஆகியோரே அந்த இருவரும் ஆவர்.

இவர்களில் இருவரும் ஒரு கிருந்து கிளிநொச்சிக்கு மண்ணெண்ணெய் வாங்கச் சென்றவர்கள் என்று தெரிவிக்கப்

[2 ஆம் பக்கம் பார்க்க]

நெடுங்கேணியில்

யாழ்ப்பாணம், ஜன; 13

முல்லைத்தீவு மாவட்டம் நெடுங்கேணியில் நேற்றுக் காலை10மணிக்களவில்இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் இரண்டு தடவைகள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இந்தத் தாக்குதலில் அந்தப் பகுதியைச் சேர்ந்த சிவபாதம் (32 வயது), தவம் (21 வயது), கனகேந்திரம் (19 வயது), மயூரன் (18 வயது) ஆகிய நால்வரும் காயமுற்றனர். (உ)

இயக்கச்சியில் இருவர் பலி!

யாழ்ப்பாணம், ஜன. 13

நேற்று பிற்பகல் இயக்கச்சிப் பகுதியில் ஹெலிகொப்டர் விமானப் படையின் அவ்ரோ விமானம் ஒன்று நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் ஒரு பெண்மணி உயிரிழந்தார்; ஒரு சிறுமி படுகாயமுற்றாள்; பலர் காயமுற்றனர்; மூன்று வீடுகள் பகுதி சேதமடைந்தன.

வை. எம். சீ. ஏ. குடியிருப்புத் திட்டப் பகுதியில் வீசப்பட்ட இரு குண்டுகளினால் 3 வீடுகள் சேதமடைந்தன.

அச்சமயம் வீட்டில் இருந்த வேலு என்பவரின் மனைவி அந்த இடத்திலேயே மரணமானார்; அவரின் மகளான செல்வி வே. கண்ணா (வயது 12) படுகாயமடைந்தார்.

இயக்கச்சியில் மற்றொரு இடத்தில் வீசப்பட்ட குண்டினால் வயோதிப மாது ஒருவர் உயிரிழந்ததாக கூறப்பட்டது. ஆனால் அதனை இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை ஊர்ஜிதம்செய்ய முடியவில்லை. [உ-6]

வவுனியா பகுதியிலும் நேற்று குண்டு வீச்சு

வவுனியா இரணை இலுப்பைக்குளம், மதினா நகர் ஆகிய பகுதிகளில் நேற்றுக் காலை 9.45 மணியளவில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

மதினாநகரில் இடம்பெற்ற தாக்குதலில் இறம்பைக்குளத்தைச் சேர்ந்த செல்வரத்தினம் [illegible] (வயது) என்பவர் மரணமானார். [உ]

ஆனையிறவிலும்

ஆனையிறவுப் பகுதியிலும் நேற்று காலை விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றதாகத் தெரியவந்தது.

சேதவிவரம் தெரியவரவில்லை.

பரந்தன் பகுதியிலும் குண்டு வீச்சு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும், அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

(ஒ-113-6)

மின்கோபுர திருத்தவேலை செவ்வாய் ஆரம்பமாகிறது

பிரதிப் பொது முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன; 13

வடபகுதிக்கான 132 கே. வி மின்மார்க்கத்தில் திருத்த வேலைகள் நாளை மறுதினம் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவிருப்பதாக இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் வி. சந்தசாமி அறிவித்துள்ளார்.

மாங்குளத்தில் இந்தத்திருத்த வேலைகளில் இலங்கை மின்சாரசபையின் 5 அதிகாரிகள், 30 தொழிலாளர்கள் ஈடுபடஉள்ளனர். ஒருபகுதி சேதமடைந்த இரண்டு கோபுரங்களையும், முற்றாகச் சேதமடைந்த கோபுரத்தையும் திருத்துவதற்கு ஒரு மாத காலம் எடுக்கும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திருத்த வேலைகள் [2 ஆம் பக்கம் பார்க்க]

யுத்த விளைவுகளுக்கு அரசே இனிப் பொறுப்பு

விடுதலைப் புலிகள் நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 13

தமிழீழத்தில் ஒரு நிரந்தர சமாதானம் ஏற்பட்டு, எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும் என்பதற்காகவே நாம் போராடி வருகிறோம். ஆனால் எமது நேர்மையான நோக்கத்தையும், தூய்மையான அரசியல் இலட்சியத்தையும் தவறாக மதிப்பிட்டு எம்மை அழித்துவிடும் நோக்கத்துடன் சிங்கள அரசு இந்த யுத்தத்தை தொடர முடிவெடுத்துள்ளது.

எனவே இந்த யுத்தத்தால் ஏற்படக்கூடிய சகலவிதமான விளைவுகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.

—இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழீழத்தில் சமாதானத்தையும் இயல்பு நிலையையும் உருவாக்கும் நல்லெண்ண முயற்சியாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்த காலவரையறையற்ற போர்நிறுத்தத்தையும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையையும் ஸ்ரீலங்கா அரசு நிராகரித்துள்ளது. ஆயுதங்களைக் கீழே போட்டு சரணாகதி அடையக் கோரும் அந்நியான

[2 ஆம் பக்கம் பார்க்க]

CC-0. Jaffna Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யுத்த விளைவுகளுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிபந்தனைகளை முன்வைத்து யுத்தத்தைத் தொடர்வதற்கு சிங்கள அரசு முடிவுசெய்திருக்கிறது.

சமாதான வழிமூலம் தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஸ்ரீலங்கா அரசுக்கு எவ்வித மான அக்கறையும் இல்லை யென்பதை இந்த முடிவானது உலக சமுதாயத்திற்கு தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறது. இவைதவிர அரகலிலிருந்தும் இராணுவ அடக்குமுறைப் பாதையிலிருந்தும் சிங்கள ஆளும்வர்க்கம் ஒருபொழுதும் விடுபட விரும்பவில்லை என்பதையும் இந்த முடிவு உலகிற்கு நன்கு உணர்த்தியிருக்கிறது.

6 ஆயிரம் தமிழர் உயிரிழந்தனர்

போர் எல்லாமாக வையில் ஸ்ரீலங்கா அரசு தமிழீழ மக்களுக்கு எதிராக எறுமில்லாத வாறு ஒருவெறுமான இனப் படுகொலையை நடத்தி வந்தது. ஏழு மாதங்களுக்கு நடைபெற்ற இந்த யுத்தத்தில் ஆறாயிரத்தறகும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்; பல்லாயிரம் பேர் காயமடைந்தனர்; பத்து லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாயினர்; தென் தமிழீழம் இரணகளமாக்கப்பட்டது; எங்குபார்த்தாலும் தமிழக் கிராமங்களிலிருந்து தமிழகமான விரட்டியடிக்கப்பட்டனர்.

போர் ஆரம்பமாகிய காலத்திலிருந்து தமிழீழத்தில் ஒரு இடைமட்டவாருமானதாரத்தையை அரசு நணித்தது.

இதனால் உணவு உலகை, மருந்து உலகை, எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் தாங்கொணாத துன்பத்திற்கு ஆளாகினர்.

யுத்த நிறுத்தம் செய்தது ஏன்?

யுத்தம் எல்லாமாகவையில் தொடர்ந்து நடந்த இனப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்தி, எமது மக்களின் பரிதாப நிலையை உலகிற்கு எடுத்து காட்டி, அவர்களுக்கு நிவாரணமும் நிவாரணத்தையும் கொடுக்கும் நோக்கமாக நாம் இப் புத்தாண்டில்ருந்து ஒருதலைப் பட்சமான காலவரையறை யற்றபோர் நிறுத்தத்தை பிரகடனம் செய்தோம். தமிழ் முத்தல சமாதானத்தையும் சமூக நிலையையும் உண்டு பண்ணும் தலைவெண்ணத்தோடு நாம் மேற்கொண்ட போர் நிறுத்தம் எமமரல பிரகடனப்படுத்தப் பட்டது. ஸ்ரீலங்கா அரசும் போர் நிறுத்தத்திற்கு இணங்கினால் சமாதான பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றவும் நாம் இணங்கினோம்.

எமது முடிவை சர்வதேச உலகம் வரவேற்றது.

ஆனால் எமது போர் நிறுத்த அறிவித்தலை அரசு ஆங்கீகரிப்பதற்கு ஆர்வத்தையும் குழப்பதையும் உண்டுபண்ணியது.

நாம் போர் நிறுத்தம் அறிவித்த திகதியிலிருந்து ஆறு நாட்கள் வரை என்வித முடிவும் எடுக்க முடியாது அரசு தடுமாறியது. அதே சமயம், அரசாங்கம் முடிவு எடுக்கும் வரை காத்திராது மூன்று நாட்களுக்குத் தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்துவதாக ஸ்ரீலங்கா இராணுவத் தலைமைப் பீடம் ஓர் அறிவித்தலை விடுத்தது. இதன் பின்னர், அதாவது ஆறு நாட்களுக்கு இமுபட்ட பின்னர் போர் நிறுத்தம் என்ற வார்த்தைப் பிரயோகத்தைத் தவிர்த்து, ஏழு நாட்கள் வரை காலவரம்பிட்டு "தாக்குதல் இடை நிறுத்தம்" ஒன்றை அரசு அறிவித்தது; அதிலும் ஒருதலைப் பட்சமாக கடும் நிபந்தனை களையும் விதித்துக்கொண்டது.

விதண்டாவாதம்

அந்த அறிவித்தலில், தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தம் செய்யவில்லை என்றும் இனப் படுகொலையில் ஈடுபட வில்லை என்றும் அரசாங்கம் மறுத்துள்ளது.

இதற்கு ஆதாரமாக பல தமிழக் குழுக்கள் அரசுக்கு ஆதரவாக நிற்பதை சுட்டிக் காட்டியது.

இந்த விதண்டாவாதத்தை எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

அரசாங்கத்தின் அடிவருடிகளாக நிற்கும் இந்த தமிழக் குழுக்கள் யார், இவர்களின் அரசியல் பின்னணி என்ன, இவர்கள் செய்து வரும் இனத் துரோகம் எப்படிப்பட்டது என்பதை எமது மக்களும் உலகமும் நன்கறியும். இந்தக் குழுக்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்லர்; தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள். முன்பு இந்திய அரசுக்கு கூலிப்படைகளாக இலங்கை இருந்தபொழுது சிங்கள இராணுவத்தின் உதவிப்படை வீரர்களாகச் செயல்பட்டவர்கள்; இராணுவத்துடன் சேர்ந்து தமிழ் மக்களின் இனப்படுகொலைக்குத் துணை போகிறவர்கள். இந்த தமிழ்த் துரோகக் கும்பல்களின் ஆதரவைப் பெற்றால் போல இனப்படுகொலையை மூடி மறைக்கலாம் என அரசு எண்ணுவது உலகத்தின் கண்ணில் மண்ணைத் தூவுவதற்கு ஒப்பாகும்.

ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமை மீறல்கள் உலக சந்தனையை எட்டியிருக்கிறது என்பதை சர்வதேச சமூகம் நன்கறியும். தமிழ் மக்கள் இனரீதியாக அழிக்கப்படுவது ஒருபுறமிருக்க, 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவிச் சிங்கள மக்களை இந்த அரசு கொன்று குவித்திருக்கிறது என்ற ஒற்றச்சாட்டை சிங்கள மனிதஉரிமை நிறுவனங்களே முன்வைத்துள்ளன.

அபாண்டமான குற்றச்சாட்டு

யுத்தத்தை தொடரப் போவதாக ஸ்ரீலங்கா அரசு நேற்று விடுத்த அறிக்கையில் விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்பும் நோக்கமான நோக்கத்துடன் போர் நிறுத்தப் பிரகடனத்தை செய்யவில்லை என தெரிவித்திருக்கிறது. போர் நிறுத்தத்தை நாம் தொடர்ச்சியாக மீறி வந்ததாகவும் குற்றம் சாட்டுகிறது. இது அபாண்டமான ஒரு பொய்க் குற்றச்சாட்டாகும்.

உண்மையில் சமாதானத்தை விரும்பும் நோக்கமான நோக்கம் ஸ்ரீலங்கா அரசிடம்தான் இருக்கவில்லை சிங்கள இராணுவம் சண்டையைத் தொடர விரும்புகிறது என்றும் — இராணுவத்தின் விருப்புக்கு மாறாக அரசு ஒன்றும் செய்ய முடியாது என்றும் சமீபத்தில் பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் கூறியிருக்கிறார். இந்தக் கூற்றிலிருந்து சமாதானத்தின் விரோதிகள் யார், சண்டையை விரும்புபவர்கள் யார் என்பது தெளிவாகிறது.

வீண் பழி

விடுதலைப் புலிகள் இயக்கம் போர் நிறுத்தத்தை கண்டிப்பான முறையில் கடைப்பிடித்து வந்திருக்கிறது. சிங்கள இராணுவத்தின் தொடர்ச்சியான ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளுக்கும் மத்தியில் நாம் மிகவும் பொறுமையுடன் போர் நிறுத்தத்தைப் பேணி வந்திருக்கிறோம். நாமாகவே ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தத்தைப் பிரகடனம் செய்துவிட்டு, போர் நிறுத்தத்தை எதற்காக நாம் மீற வேண்டும்? எனவே, ஸ்ரீலங்கா அரசின் குற்றச்சாட்டு அர்த்தமற்றது. யுத்தத்தை தொடர்வதற்கு நியாயம் கற்பிப்பதற்காகவே ஸ்ரீலங்கா அரசு எம்மீது வீண்பழியைச் சுமத்த முயல்கிறது. இதனை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளும் என நாம் நம்புகிறோம்.

இம்மாதம் 9ஆம் திகதி நாம் வெளியிட்ட அறிக்கையில், பேச்சுவார்த்தைகளுக்கு எவ்வித முன் நிபந்தனைகளையும் நாம் ஏற்கப்போவதில்லை என்றும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளையே நாம் விரும்புவதாகவும் கிட்டவட்டமாகத் தெரிவித்திருந்தோம்.

இந்தியா கற்ற பாடம்

ஆனால் அரசு பேச்சுவார்த்தைகளுக்கு கடுமையான—ஏற்றுக்கொள்ள முடியாத — பல முன் நிபந்தனைகளை விதித்திருக்கிறது. ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்பது இதில் முக்கிய நிபந்தனையாக இருக்கிறது. எமது இயக்கம் கடந்த 17 ஆண்டுகளாக ஆயுதப் போராட்டத்தை ஏன் நடத்தி வருகிறது என்பதைச் சிறிதேனும் விளங்கிக் கொள்ளாமல் இந்த நிபந்தனை முன்வைக்கப்பட்டிருப்பது எமக்கு ஒரு புறம் ஆச்சரியத்தையும் மறுபுறம் கவலையையும் தருகிறது.

இந்திய அரசும் இது போன்ற நிபந்தனையை விதித்ததால் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் ஒரு நீண்ட யுத்தம் மூண்டது என்பதும், இறுதியில் எம்மிடம் ஆயுதங்களை களையை முடியாத நிலையில் இந்திய இராணுவம் வெளியேறியது என்பதும் ஸ்ரீலங்கா அரசிற்கு நன்கு தெரிந்த விடயம். இந்திய அரசு செய்த மாபெரும் வரலாற்றுத் தவறையே ஸ்ரீலங்கா அரசும் செய்யப் போகிறது என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஸ்ரீலங்கா அரசு விடுத்துள்ள அறிக்கையில் இராணுவப் பிரிவு, அரசியற் பிரிவு என்ற ரீதியில் எமது இயக்கத்தை பிளவுபடுத்தக் காட்ட முனைகிறது. எமது இயக்கத்தின் தலைவர் பிரபாகரனை இராணுவப் பிரிவுத் தலைவராக தவறாக மதிப்பிடுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது இராணுவ, அரசியல் அமைப்புகள் ஒன்றிணைந்த ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்பதையும், அந்த விடுதலை இயக்கத்தின் தலைவராகவே பிரபாகரன் பதவி வகிக்கிறார் என்பதையும் ஸ்ரீலங்கா அரசு புரிந்து கொள்ளவில்லைப் போலும். அத்தோடு, எமது இயக்கத்தில் இராணுவம், அரசியல் என்ற வேறுபாடு இல்லை. பேச்சுவார்த்தைகளில் யார் பங்கு பற்ற வேண்டும் என்பதை ஸ்ரீலங்கா அரசு தீர்மானிக்க முடியாது; அது எமது இயக்கத் தலைமை பீடம் எடுக்க வேண்டிய முடிவு.

நியாயமற்ற முன் நிபந்தனை

ஸ்ரீலங்கா அரசு தனது அபாண்டமான பொய்க் குற்றச்சாட்டுகளை எம்மீது சுமத்திருக்கிறது.

எமது இயக்கம் மீது களங்கத்தை ஏற்படுத்துவதோடு, சமாதானப் பேச்சுக்களுக்கு முட்டுக்கட்டை போடுவதற்காக திட்டமிட்டு இந்தக் குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. ஒட்டு மொத்தத்தில், ஸ்ரீலங்கா அரசின் அறிக்கையை நன்கு பரிசீலனை செய்து பார்க்கும் பொழுது, தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதே நேக்கில் நியாயமற்ற ஏற்றுக்கொள்ள முடியாத முன் நிபந்தனைகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே, சமாதானமான முறையில் தமிழீழ மக்களின் நீண்டகாலப் பிரச்சினையை தீர்த்து வைக்க அரசு விரும்பவில்லை என்பது தெளிவாகிறது. உள்நாட்டு நிர்ப்பந்தங்களையும், தென்விலங்கையில் தலைவிரித்தாடும் சமூகப் பிரச்சினைகளையும் திசை திருப்பும் நோக்கத்துடன் அரசாங்கம் இந்த யுத்தத்தை தொடர விரும்புகிறது. ஸ்ரீலங்கா அரசின் இந்த யுத்த போக்கத்தினால் பாதிக்கப்படவிருப்பது தமிழ் மக்களே. இந்த யுத்தம் தொடர்வதால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட எமது மக்கள் மேலும் பெரிய துன்பத்தை சந்திக்க நேரிடும்.

உலக நாடுகள் கண்டிக்க வேண்டும்

எனவே, ஆலங்கைத் தீவில் சமாதானத்தையும் பேச்சுமூலம் தீர்வையும் விரும்பும் உலக நாடுகள் ஸ்ரீலங்கா அரசின் இராணுவ அடக்குமுறைக் கொள்கையைக் கண்டிக்க முன்வரவேண்டும் ஸ்ரீலங்கா அரசுக்கு உதவிகளை நிறுத்தி சமாதானப் பாதையைக் கடைப்பிடிக்க வற்புறுத்தவேண்டும்.

ஸ்ரீலங்காவில் மனித உரிமை மீறல்கள் சகிக்கமுடியாத அளவிற்கு மீறப்பட்டு வருவதை நன்கு தெரிந்து இருந்தும் வேறு ஒரு உலக நாடுகள் தொடர்ந்தும் கடனுதவி வழங்கி வருகின்றன. சீனா போன்ற நாடுகள் ஆயுதங்களைக் குவித்து வருகின்றன. இந்த உதவிகள் கிடைப்பதால் துணிவுகொண்ட ஸ்ரீலங்கா அரசு தொடர்ந்து மனித உரிமைகளை மீறி, மனித நீதிக்கு விரோதமாகச் செயற்படுகிறது. எனவே, ஸ்ரீலங்கா மீது பொருளாதார அழுத்தங்களைப் போட வேண்டியது நாகரீக உலகத்தின் கடமையாகும்.

தமிழீழத்தில் ஒரு நிரந்தர சமாதானம் ஏற்பட்டு, எமது மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காகவே நாம் போராடி வருகிறோம். ஆனால் எமது நேர்மையான நோக்கத்தையும், தூய்மையான அரசியலையும் புரியத்தையும் தவறாக மதிப்பிட்டு எமமை அழித்து விடும் நோக்கத்துடன் சிங்கள அரசு யுத்தத்தை தொடர முடிவெடுத்துள்ளது. எனவே, இந்த யுத்தத்தால் ஏற்படக் கூடிய சகலவிதமான விளைவுகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (உ)

மின்கோபுரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்தாலும் யாழ். மாவட்டத்துக்கு 5 மெகவாட் மின்சாரத்தையே பெறக்கூடியதாக இருக்கும்.

இத்திருத்த வேலைகள் முடிவடைந்ததும் கிளிநொச்சி பிரதான உப-மின் நிலையத்துக்கு கிடைக்கும் 132 கே. வி மின்சாரம் அங்கிருந்து சுன்னாகம் பிரதான உப-மின் நிலையத்துக்கு 33 கே. வி. மின் மார்க்கம் மூலம் கிடைக்கும்.

இவ்வாறு ஐந்து மெகவாட் மின்சாரம் மட்டுமே பெறக்கூடியதாக இருக்கும். மேற்படி திருத்த வேலைகளை செய்வதற்கு சுமார் 50 லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது

இதேவேளை மின்மாற்றிகளுக்குத் தேவையான மின்மாற்றி எண்ணெயைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகவும் திரு. கந்தசாமி விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

காலை நடந்த.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

இதே வேளை—

ஜெயந்திநகர் கணேசபுரம் பகுதியிலும் குண்டு வீச்சுகள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

கனகபுரத்தில் வீசப்பட்ட குண்டினால் ஒரு வீடு முற்றாக சேதமுற்றதாகவும் கனகபுரத்தைச் சேர்ந்த திருமதி பராசக்திபுரம், ஜெயந்திநகரில் திருமதி நடராஜாவும் காயமடைந்தனர் என்றும்—

ஜெயந்திநகரிலுள்ள திருமதி நடராஜாவின் வீடு சேதமடைந்ததாகவும் தெரிய வந்தது. (ஒ-5-16)

'டப்பா' வெடித்தது; விரல்கள் சிதறின!

வீட்டில கிடந்த சின்னஞ் சிறிய 'டப்பா' ஒன்றை எடுத்தவர், அதை கைகளால் நசித்தபோது அது வெடித்து அவரது விரல்கள் இரண்டு சிதறின. உடலில் பல இடங்களில் அவர் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 3 30 மணியளவில் மண்டைதீவு 5ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றது.

செல்வராஜா ஸ்ரீகிருஷ்ணராஜா (வயது 21) என்ற இளைஞரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

மண்டைதீவு குஇராணுவம் முன்னர் வந்தபோது இவரது வீட்டில் முகாம் அமைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நாளைவரும் பொங்கல் தினத்துக்காக நேற்று இவர் தமது வீட்டைக் கழுவியதாகவும் —

அப்போது வீட்டில் கிடந்த ஒரு சிறிய டப்பாவை அவர் கண்டெடுத்ததாகவும்—

'விக்ஸ் மருந்து டப்பாவை விட சிறியதாகக் காணப்பட்டிருந்த 'டப்பா'வை அவர் நசித்தபோது அது வெடித்ததாகவும் கூறப்பட்டது. (உ-6)

3 பொதுமக்கள் காயம்

யாழ்ப்பாணம், ஜன 13

வலிகாமம் நகரப் பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் இராணுவச் சிப்பாய்கள் பொதுமக்களைத் தாக்கிக் காயப்படுத்தினர்.

சிப்பாய்கள் கண்டபடி அடித்ததுடன் தாக்கியதில் சிவராத்திரம் (வேலுப்பிள்ளை (வோகபுரம், மலவாவி), வி கே. நடராஜா (புத்து வெட்டுவான்), பரமு இராத்தினம் (உருத்திரபுரம்) ஆகிய மூவருமே காயமடைந்தனர். (ஒ)

ஷெல்லும் வேட்டும்

புங்குடுதீவு ஜன. 13

ஊர்காவற்றுறை இராணுவத்தினர் நேற்று மூன்றினம் திடீரென ஷெல் தாக்குதல் நடத்தியதோடு, சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகளையும் தீர்த்தனர்.

ஷெல்களில் அனேகமானவை வயல்வெளியில் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது (ஒ 131)

சிறுமி பலி

புங்கு தீவு ஜன. 13

குளக்கரையில் நின்று விளையாடிக்கொண்டிருந்த 5 வயதுச் சிறுமி தற்செயலாக தவறிக் குளத்துக்குள் விழுந்து மரணமானாள்.

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தில் வசித்த வியாழக்கிழமை நடந்த இச்சம்பவத்தில் எண்ணிக்கை மற்றும் பெயர் விபரங்கள் தொடர்பாக விரிவான தகவல்கள் செய்தி அலுவலகத்துக்குப் போகும்வரை கிடைக்கவில்லை.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13 என ஊர்ஜிதப்படுத்தப்படாக மறறொரு செய்தி கொவிந்தது. (உ-15)

கிளிநொச்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அ... குதியில் சில கடைகள் குண்டு வீச்சால் பலத்த சேதமுற்றன.

இந்தச் சம்பவத்தில் படுகாயமுற்ற ஆறு பேர் நேற்று நள்ளிரவு யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டனர். பி நாராயணன் (வயது 68) — கிளி நாச்சி, வ. கணபதி (வயது 69 — முருகானந்தா, க. இந்திரபோஸ் (வயது 23)- குமரபுரம் மதிஞானசிங்கம் (வயது 21) — சிதறன்கணி, சசிகுமார் (வயது 14) — கிளி நெச்சி, பிரபாகரன் (வயது 32) — நெடுங்கேணி ஆகியோரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களாவர்

பிரபாகரன் என்பவர் முகத்திலும் உடலின் பல பகுதிகளிலும் எரிகாயங்களுக்கு இலக்காகியுள்ளார். இவர் கொண்டு வந்த வெறியேகுண்டு வீச்சால் பெரும் சேதமடைந்ததாகத் தெரியவந்தது

கிளிநொச்சியிலிருந்து படுகாயமுற்ற நிலையில் கொண்டு வரப்பட்ட ஒருவர் வழியில் மரணமானார்.

இச்சம்பவம் குறித்த தகவல் நேற்றிரவு கிடைத்த போதும், உயிரிழந்தோரின் எண்ணிக்கை மற்றும் பெயர் விபரங்கள் தொடர்பாக விரிவான தகவல்கள் செய்தி அலுவலகத்துக்குப் போகும்வரை கிடைக்கவில்லை.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13 என ஊர்ஜிதப்படுத்தப்படாக மறறொரு செய்தி கொவிந்தது. (உ-15)

மரண அறிவித்தல்

செல்வன் யோகநாதன் பிரதாபனன்

(மெடிசின் மாஸ்டர்)

செல்வன் யோகநாதன் பிரதாபனன் 10 - 1 - 1991 அன்று காலமானார். இவர் திரு. யோகநாதன் (உதவி மேற்பார்வை உத்தியோகத்தர், கடற்றுறை அதிகார சபை, கொழும்பு), திருமதி இராசநாயகி யோகநாதன் தம்பதிகளின் அருமைப் புதல்வனும், பிரகலாதன் (லண்டன்), பிரகலா (சமூக சேவை உத்தியோகத்தர், சமூக சேவைத் திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம்), பிரதீபன் (ஜேர்மனி), பிரதீபா (லண்டன்), பிரதிலீப் ஆகியோரின் சகோதரரும் சத்தியவாணியின் (லண்டன்) மைத்துனரும், சிந்துஜாவின் (லண்டன்) சித்தப்பாவுமாவார்.

அன்னாரது இறுதிச்சடங்கு 12 - 01 - 91 நேற்று அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது

தகவல்:

திருமதி இ. யோகநாதன்

" இராஜவிநி"
2 ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

[C/5645]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தமிழகம் மீது கைவைத்தால்....

தமிழ்நாடு விவகாரம் இப்போது அகில இந்திய மட்டத்தில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. மக்கள் பிரதிநிதிகள் சபையில் பெரும் அமளி துமளியை உண்டாக்கும் அளவுக்கு அது விஸ்வரூபம் எடுத்திருக்கிறது.

கலைஞர் கருணாநிதியை— அவரது தி. மு. க. ---எப்படியும் ஆட்சிக் கதிரையிலிருந்து இறக்கிவிட வேண்டும் என்பது திரு. ராஜீவ் காந்தியின் விருப்பம். அசாம் மாநில அரசைக் கலைத்தது போல தமிழ்நாடு அரசையும் கலைத்துவிட வேண்டும் என்பது அவரது வேணவா.

சந்திரசேகரர் ஆட்சியிக் அமர்த்த அவர் விதித்த நிபந்தனைகளில் கருணாநிதியைக் கவிழ்ப்பதும், கலைப்பதும் ஒன்று. அதற்கான தகுந்த சூழ்நிலையை உண்டாக்கும் பொறுப்புச் சந்திரசேகருடையதாகி விட்டது.

சந்திரசேகரின் பேச்சும், செயற்பாடுகளும் அதனையே காட்டுகின்றன. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெடுக்கப்பட வேண்டும் என்று ஆராயித்தவர் அவர். இன்று அது ஒரு வன்செயல் பூமியாக மாறிவிட்டதாக சொல்லித்துக் காட்டுகிறார். ஆனால், அவர் கூறுமளவுக்கு, அல்லது எதிர்க்கட்சிகள் காட்டிக் கொள்ளும் அளவுக்கு அதார்த்த நிலை மோசமடையவில்லை.

ஈழப் பிரச்சினையில் ராஜீவின் தவறான அணுகுமுறை இந்தியாவுக்குப் பெரும் சிவமதி பை ஏற்படுத்தியது அ[illegible]னைச் சந்திரசேகரே ஒப்புக் கொள்கிறார்.

சர்வதேச விவகாரங்களில், உதவி செய்யப் போவது சிக்கல் நிறைந்த ஒன்றாகும். இலங்கை விவகாரத்தில் நாம் மிகவும் கவனமாக இருப்போம். ஆயும் அறியாமல் சாலை விடுவதற்கு நாம் விரும்பவில்லை என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

எனினும் ஈழப்போராளிகள் விவகாரம் கருணாநிதியை கலைத்து விடுவதற்கு ஒரு வெற்றி அம்பாகஇருக்கும் என்று அவருக்குக் கணக்குப் போட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே அதனை நழுவ விடாமல் இறுக்கிப்பிடிக்கப் பார்க்கிறார்.

அதனால் எப்படியாவது, ஏதோ ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தி கருணாநிதி அரசைக் கலைத்துவிட அவர் கங்கணம் கட்டி நிற்கிறார். அதற்கு ஈழப் போராளிகள் விவகாரம் பொருத்தமான அம்பாகி விட்டது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழக அரசாங்கத்தைக் கலைத்து விடுவதால் அரசியல் குழிவாங்கல் நிறைவேறலாம் ஆனால் அங்கு அமைதியை நிலைநாட்ட முடியாது நிச்சயமாக மக்கள் எழுச்சி வெடிக்கவே செய்யும். அந்த எழுச்சி எதிர்பார்க்காத பெரும் வன்செயல்களைத் தோற்றுவிக்க அதிதீவாரம் இடும். இப்போது அமைதியாக இருக்கும் தமிழகம் மறறொரு பஞ்சாப்பாகவும், காஷ்மீராகவும், அஸாமாகவும் கூட மாறலாம்.

எனவே ராஜீவின் அரசியல் லாபம், தனது பதவி லாபம் ஆகியவை கருதி சந்திரசேகர் தமிழக அரசைக் கலைத்தால் இந்தியாவில் இன்னொரு பஞ்சாப்பை உருவாக்கிய "ஜாதனை"யை அவர் நிலை நாட்டுவார் என்பது நிச்சயம்!

வைத்தியர்கள் பற்றாக்குறையால்

மந்திகை ஆஸ்பத்திரி பாதிப்பு

பருத்தித்துறை, ஜன.13

பதினாறு வைத்திய அதிகாரிகள் கடமையாற்ற வேண்டிய மந்திகை ஆஸ்பத்திரியில் மூன்று நிரந்தர வைத்தியர்களே தற்போது கடமையாற்றுகின்றனர்.

இதனால் இந்த வைத்திய சாலை பெரும் இக்கட்டான நிலையில் இருப்பதாக வைத்தியசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் யாழ். சுகாதாரத் திணைக்கள அத்தியட்சகருக்குத் தெரிவித்துள்ளனர்.

இன்றுள்ள நிலையில் ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி ஒருவரும் முன்பு வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய வரும் தொண்டர்களாகத் தொடர்ந்து கடமையாற்ற அனுமதி வழங்குமாறு சுகாதார அத்தியட்சகரிடம் அபிவிருத்திச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மற்றும் சுகவிருப்பின்பேரில் இளைப்பாறும் திட்டத்தின் கீழ் பத்துக்கு மேற்பட்ட தாதிகள் இளைப்பாற முற்பட்டுள்ளனர்.

இவர்களின் சேவை வைத்தியசாலைக்குத் தேவையாக உள்ளதால் இவற்றை மீள் பரிசீலனை செய்யக் கோர வேண்டும் என வும் வெளி நோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்களைக் கவனிப்பதற்குப் போதிய உதவி வைத்தியர்களையும் வைத்திய அதிகாரிகளையும் அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையைத் துப்புரவு செய்யும் தொழிலாளருக்கு பற்றாக்குறை நிலவுவதால் வார்ட்டுக்களின் கழிவு நீர் ஓடும் கால்வாய்கள் தினமும் சுத்தம் செய்யப்படுவதில்லை.

இவ் வைத்தியசாலைக்குத் தேவையான நிரந்தர அமைய சிற்றூழியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றும்கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-18)

சண்டிலிப்பாய் உ. அ. பிரிவில் தூர்மப்பணம் நிறுத்தம்

நவாலி, ஜன. 13

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் [தர்மப்பணம்] பெற்று வந்த பலருக்கு இப்பணம் திடீரென நிறுத்தப்பட்டுவிட்டது.

இதுபற்றி சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது பகுதி கிராம சேவையாளர்கள்மூலம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

இவர்களுக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட குடும்பப்பதிவு அட்டையில் சுயதொழில் முயற்சிக்கான நன்கொடைப் பணம் ரூபா நாலாயிரம் பெறுவதற்கு சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகப் பதில் அளிக்கப்பட்டதாம்.

ஆனால் இதுவரை இவர்களுக்கு இப் பணம் வழங்கப் படவில்லை.

இவர்களில் அநேகமானவர்கள் கணவனை இழந்த விதவைகள் என்பதும் எய்திய பெண்களாவர்.

இது சம்பந்தமாக யாழ். சமூக சேவைப்பகுதி உதவிப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு விளவிய பொழுது இவர்கள் மீண்டும் விண்ணப்பம் செய்யலாமென்றும் இவர்களது நிலை பரிசீலிக்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார். [இ-100]

ஒரு நாள் வேதனம்

தென்மராட்சி, ஜன. 11

சாவகச்சேரி நகரசபை ஊழியர்கள் தென்தமிழீழ மக்கள் நிதிக்கு தமது ஒரு நாள் வேதனத்தை வழங்கியுள்ளனர். (இ-117)

எழுத்துச் சீர்திருத்தம் நிர்வாக மட்டத்திலும்

கொழும்பு, ஜன. 13

தமிழ் எழுத்துச்சீர்திருத்தத்துக்கு ஏற்ப எடிதததொடர்புகள் சுற்றுநிருபங்கள் தயாரிப்பு ஆகியவற்றை மேற்கொள்ளும்படி பொதுநிர்வாக, மாகாண சபை, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மாகாணசபைகள் அமைச்சுகள் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றை சுற்றுநிருபம் மூலம் கேட்டுள்ளது. (இ-6)

அகதிகளுக்கு முகாம்

சாவகச்சேரி ஜன. 13

சந்திரபுர(மட்டுவில்)ஸ்ரீகந்தவரோதய மகா வித்தியாலயத்தில் உள்ள 41 திருமலை அகதிக் குடும்பத்தினருக்கு பிரத்தியேக முகாம் ஒன்று நுணாவில் மேற்கில் திறக்கப்படவிருக்கிறது. (இ-31)

வீடுகள், கடைகளில் திருட்டு; சைக்கிள் களவு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன 13

கலட்டியுடைப்பு. வீடு உடைப்புத் திருட்டுக்களும் சைக்கிள்களவுகளும் யாழ்ப்பாணப் பகுதியில் அதிகரித்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

வியாழக்கிழமை இரவு சுண்டுக்குழிப் பகுதியில் இரு திருட்டுகள் இடம்பெற்றுள்ளன. சண்டிவீதியில் கடை ஒன்று உடைக்கப்பட்டு அரிசி மூடைகள், உட்பட பல பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. திருடர்கள் வண்டில் ஒன்றில் இவற்றை ஏற்றிச் சென்றிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

அதேதினம் இரவு பழைய பூங்கா வீதியில் வீடு ஒன்றில் திருட்டு இடம்பெற்றிருக்கிறது. உரிமையாளர்கள் கொழும்பு சென்றதையும், வீடு அறை ஒன்றில் வாடகைக்குத் தங்கியிருந்த ஆசிரியை ஒருவர் அங்கு இரவில் தங்காததையும் பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி உள்ளனர்.

வீட்டில் இருந்த மோட்டார் சைக்கிள், டெலிவிஷன் உட்பட பல பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இங்கு திருடப்பட்ட பொருளகளும் வண்டிலேயே ஏற்றிச் செல்லப்பட்டன என்று நம்பப் படுகிறது.

அதேசமயம் யாழ். போதனா ஆஸ்பத்திரிக்கு மூன் வீதியில் வியாழக்கிழமை இரு சைக்கிள்களும் அதற்கு முதல் நாள் இரு சைக்கிள்களும் களவு போயின.

வியாழக்கிழமை தொண்டமனாறு வாசி ஒருவர் யாழ் நகரின் மத்தியில் தமது சைக்கிளை களவு கொடுத்துவிட்டு திரும்பிச் செல்ல வழி இன்றி அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்.

இதே வேளை கடந்த 5ஆம் திகதி இரவு ஆனைக்கோட்டையில் உள்ள கடை ஒன்றில் டோர்ச் பற்றறிகள், சிகரெட்டுட்பட பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன. (இ-6-100)

கொடிகாமம் சந்தை

கொடிகாமம் சந்தையுங் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. வரி அறவிடும் வேலைகளில் மூன்னர் இருந்தவர்களே தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர். இ-75)

பதவி உயர்வு

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் உள்ளூராட்சி நிர்வாக சேவையின் முதலாம் வகுப்புக்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இவ்வாறு பதவியுயர்வு பெற்றவர்களில் இவர் ஒருவரே தமிழர் ஏனைய நால்வரும் சிங்களவர்கள் ஆவர். (இ-9)

நெடுந்தீவில் பாலர் பாடசாலை

நெடுந்தீவு மேற்கு கிராம சேவகர் பிரிவில் தென் இந்திய திருச்சபை ஆரம்பிக்க விருக்கும் பாலர்பாடசாலை, சிறுவர் பகல் பராமரிப்பு நிலையம் ஆகியவற்றுக்கான அடிக்கல்லை தென் இந்திய திருச்சபை யாழ் ஆதீனப் பேராயர் அருள் திரு. டி.ஜே. [illegible] நகரின் மத்தியில் தமது [illegible] (இ-31)

உலகச் செய்திகள்

கடைசியாக வெளியேறியோரே அந்த எட்டு எம்.பிக்களும்

புதுடில்லி, ஜன 13

கடந்த டிசம்பரில் ஜனதா தள் கட்சியில் முதன்முதலாக ஏற்பட்ட பிளவின் போது வெளியேறாமல், கடைசியாக வெளியேறிய எட்டு எம்.பிக்களையே சபாநாயகர் ரபி ரோய் நேற்று மூன்றாம் பதனிக்கம் செய்தார்.

சபாநாயகர் தனது 19 பக்கத் தீர்ப்பில் இந்த விவரத்தைத் தெரிவித்தார்.

ஜனதாதள் கட்சியில் ஏற்பட்ட முதல் பிளவின்போது வெளியேறிய ஏனைய 54 எம்.பிக்களும் அமைத்த ஜனதாதள் சோஷலிஸ்ட்கட்சியை அங்கீகரிப்பதாகவும் சபாநாயகர் அறிவித்தார்.

சபாநாயகரின் முடிவு, அரசுக்கு ஒரு தோல்வி அல்ல என்றும் தொடர்ந்து பெரும்பான்மைப் பலம் அரசுக்கு உண்டு என்றும் சட்டத்துறை அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி சொன்னார்.

சபாநாயகரின் தீர்ப்பை எதிர்த்து வழக்காட முடியாது என்று இந்திரா காங்கிரஸ் பேச்சாளர் சங்கரானந்த் சொன்னார்.

நாடாளுமன்ற ஜனநாயக வளர்ச்சிக்கு இது முன்னுதாரணமாக இருப்பதாக முன்னாள் பிரதமர் வி. பி. சிங் சொன்னார். (இ-எ)

நீக்கப்பட்ட அமைச்சர்கள் தொடர்ந்து பதவி வகிப்பர்

எம்.பி பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட ஐந்து மத்திய அமைச்சர்களும் தொடர்ந்து பதவி வகிப்பார்கள்.

இப்படி பிரதமர் சந்திரசேகர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு செய்தியாளர்களிடம் அறிவித்தார்.

வி. பி. சிங் தலைமையிலான ஜனதாதள் கட்சியில் இருந்து வெளியேறிய எட்டு எம்.பிக்களும் கட்சித் தாவல் தடைச்சட்டத்தின் கீழ் பதவிகளை இழந்து விட்டனர் என்று சபாநாயகர் ரபிரோய் உத்தரவிட்டது தெரிந்ததே.

இது தொடர்பாக சருத்து வெளியிடுகையிலேயே பிரதமர் முன்கண்டவாறு சொன்னார்.

எம்.பி பதவியை இழந்த அமைச்சர்கள் அரசியல் சாசனப்படி ஆறுமாதங்களுக்கு பதவியில் நீடிக்கமுடியும்.

அக்காலத்திற்கு இடையில் ஒரு தொகுதியில் போட்டியிட்டு எம்.பியாக தெரிவு செய்யப்படின் தொடர்ந்தும் அமைச்சராக நீடிக்கலாம்.

இப்படி பிரதமர் சந்திரசேகர் மேலும் சொன்னார்.

சந்திரசேகருக்குப் பதில்

தமிழக அரசுமீது சுமத்திய குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்து பிரதமர் சந்திரசேகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பப்போவதாக முதலமைச்சர் கருணாநிதி அறிவித்திருக்கிறார்.

தமிழகத்தில் விதிதலைப் புலிகளின் நடமாட்டம், மற்றும் செயற்பாடுகள் குறித்து அண்மையில் பிரதமர் சந்திரசேகர் நாடாளுமன்றத்தில் பேசுகையில் தமிழக அரசு மீது பல குற்றச்சாட்டுகளை சுமத்தி இருந்தார் என்பது தெரிந்ததே.

லித்துவேனிய நேரடி கோர்பச்சேவ் ஆட்சியின் கீழ் வரும்

நேரடி ஆட்சியின் கீழ் லித்துவேனிய மாநிலத்தைக் கொண்டுவரப் போவதாக சோவியத் ஜனாதிபதி மிக்கையில் கோர்பச்சேவ் நேற்று எச்சரித்தார்.

சோவியத் மத்திய அரசின் சட்டங்களை மதித்து நடக்கத்தவறின் நேரடி ஆட்சி அங்கு பிரகடனப்படுத்தப்படும் என்றும் திரு. கோர்பச்சேவ் சொன்னார்.

சோவியத் சமஷ்டியில் இருந்து பிரிந்து சுதந்திர பிரகடனத்தை லித்துவேனியா நேற்று அரசு முன்னாள் வெளியிடிருந்தது தெரிந்ததே. (இ-எ)

ஜனாதிபதி ஆட்சிப் பிரகடனம் மூலம் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டலாமா?

சென்னை, ஜன 13

ஜனாதிபதி ஆட்சியைப் பிரகடனம் செய்வது மூலம் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டிவிட முடியுமா?

தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அண்மையில் திண்டுக்கல்லுக்கு சமீபமாக பொதுக் கூட்டம் ஒன்றில் அவர் உரையாற்றினார்.

அவர் மேலும் பேசியதாவது:—

பஞ்சாப் மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியைப் பிரகடனம் செய்து மூன்றரை வருடங்கள் ஆகின்றன. இதுவரை அங்கு தேர்தல் நடத்தப்படவில்லை. ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப் படுவதற்கு முன்னர் அங்கு நிலவி வந்த நாளாந்தக் கொலைகள் இப்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளனவா? இன்று கூட கொலைகள் அங்கே நடக்கின்றன. முன்னரை விட கூடுதலாக கொலைகள் இடம்பெறுகின்றன.

கருணாநிதி கேட்கிறார்

காங்கிரஸ் ஆட்சியினதும் அ. தி. மு. கவினதும் தலைவர்கள் டில்லிக்குப் படை எடுத்து அங்கு அதிகாரத்தில் இருப்பவர்களிடம் தமிழ்நாடு அரசாங்கத்தைக் கலைக்குமாறு கோரி வருகின்றனர்.

தமிழ் நாட்டில் தங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்குகளைக் கண்டு அஞ்சுபவர்களே இ. மு. க. ஆட்சியைக் கலைக்குமாறு கோருகின்றனர்.

தங்களின் உரிமைகளுக்காகப் போராடும் புலிகளுக்கு உதவிகள் அளிக்கப்பட வேண்டும் என அ. தி. மு. கவின் பத்திரிகையில் ஜெயலலிதா கூறியிருக்கிறார். ஆனால் அதே பெண்மணிதான் தமிழ்நாடு அரசாங்கம் பதவி நீக்கப்பட வேண்டும் எனக் கோரி ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மகஜர் சமர்ப்பித்திருக்கிறார்.

ஒரு குறிப்பிட்ட பிரிவினரை திருப்திப் படுத்துவதற்காக சட்டம், ஒழுங்குப் பிரச்சினை என்ற பெயரில் தமிழ்நாடு அரசாங்கத்தை கலைப்பதனால் அதே விதி ஆந்திர மாநிலத்துக்கும் பிரயோகிக்கப்பட வேண்டும்.

தெலுங்குப் படம் ஒன்றின் படப்பிடிப்புக்காக நிரைப் படக் கம்பனி ஒன்று அண்மையில் ஆந்திராவுக்குச் சென்றது. படப்பிடிப்பு நடைபெறவிருந்த இடத்துக்கு திடீர் என குண்டர்கள் கொண்டு வந்து இறக்கப்பட்டனர் 50 ஆயிரம் ரூபா சாசுதரவேண்டும் அல்லாவிட்டால் சதாநாயகியைக் கடத்திச் சென்று விடுவோம் என குண்டர்கள் மிரட்டினர்.

இந்த அவலத்தை எனது நண்பர் ஒருவர் தான் என்னிடம் சொன்னார். அதற்காக ஆந்திரப் பிரதேச மாநில அரசாங்கம் கலைக்கப்பட வேண்டும் என நான் வாதிட மாட்டேன்.

இப்படி கலைஞர் தெரிவித்தார். [இ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

FUDO - TYPEWRITERS

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் திருத்தமான முறையில் திருத்தவும் FUDO 39/17 மின்சார நிலைய வீதி 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். கிளை: பிரதான வீதி, மாவிப்பாய்.
[சி-5585]

ஜோதிடம்

சனி மாற்றம் ரூ 4/-50 யுத்தச் செவ்வாயில் 7 மாத வக்கிரத்தாலும் 21-1-91 இல் சனி, ராகு, கேது, வியாழன் நேர்கோட்டில் பாவ சஞ்சாரத்தாலும், வள்ளல் குடும்போர் நெருக்கடி உச்சக்கட்டமும், மாநில அரசு கலைப்பால் இந்திய அரசாங்கம் ஆட்டமும், இலங்கையில் சில்லுசத்தால் பாரிய கேடுகளையும் உண்டாக்கும். நூல சிரியர்: Prof. சதுரிய தாஸன், சித்தன்கேணி.
[15500]

காணவில்லை

சூசைப்பிள்ளையார் குளம் வவுனியாவில் வசிக்கும் திரு J. P செல்லையாவின் மகன் பிரதீப் (Predeep) 26-6 90 இல் இருந்து காணவில்லை. அவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்துடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். திரு V. S. தம்பியப்பா, 133, செம்மணி வீதி, நல்லூர்.
(15503)

தேவை

எமது நிறுவனத்தில் அமைய அடிப்படையில் கடமையாற்றுவதற்கு இரவுக் கவலிகள் பகுதிநேர வேலைக்கு வரங்களை அலுவலகத்தில் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 25 01 - 91 யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், சலாசாலை வீதி, திருநெல்வேலி.
(சி/1644)

மணமகள் தேவை

அங்கிலிக்கன் மதம் 35 வயது உயரம் 5' 4" கொவிப் பிரபல்ய கல்லூரியில் B. Sc. பட்டதாரி ஆசிரியராக கல்வி பயிலும் நற்பண்புகள் கொண்ட மணமகனுக்கு அழகும் நற்பண்புகளையுடைய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும் தொடர்பு கொள்ளவும்: விக்டர் அன்னி 23/3, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்
(15511)

சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எவ்வாறானும் உடனடியாகத் தீர்வு காணவதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலே சிறுங்கள். "சக்தி சரவணா" 210 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் [யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம், வியாழ விடுமுறை.
(15386)

மணமகள் தேவை

அரசாங்கத்திலிருந்து ஓய்வு பெற்று மூவாயிரம் ரூபாய் வருமானம் பெறும் நாற்பத்தாறு வயதுடைய விவாகரத்துப்பெற்ற கத்தோலிக்க மதத்தவருக்கு முப்பத்தாறு வயதிற்கு மேற்பட்ட பெண் தேவை. விவாகரத்துப் பெற்றவர்களும், தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். சமயம் கவனிக்கப்படமாட்டாது; இல- 172, C/o, உதயன்
(15505)

நற்றுக் கன்றுகள்

எம்மிடம் சிறந்த இன கத்தரி, மிளகாய், தக்காளி, கோவா, இலைக்கோவா நாற்றுக்கள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. மூர்த்தி, குமணன் வீதி அளவெட்டி தெற்கு, அளவெட்டி.
[15216]

போட்டோஸ்ரற் பிரதிகள்

யாழ் பஸ்நிலைய முன்பாக சன்லைற்றைக்கீனர்ஸ் ஸ்தாபனத்தில் சரமான போட்டோஸ்ரற் பிரதிகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம். வேலைநேரம் காலை 8 30 — மாலை 5 30.
[சி/5639]

சேமிப்புத்திட்டம்

யாழ்ப்பாணம், ஜன, 13 யாழ். மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் அறிமுகப்படுத்தப்படும் அமரர் ஞானப்பிரகாசம் ஞாபகார்த்த பரிசுகிய சேமிப்புத் திட்டம் நாளை பொங்கல் தினத்தன்று ஸ்ரான்லி வீதியிலுள்ள தலைமைச் செயலகத்தின் நண்பகல் 12-00 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும்.
[இ]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாயபீடத்தில் குடிசார் எந்திரவியல் (புதிய / திருத்த) வேலைகளைச் செய்ய விருப்பம் தனியார் / கூட்டுறவு/ கிராம அபிவிருத்திச்சங்க ஒப்பந்தக்காரர்கள் 15-01-91 — 16-01-91 வரை திருநெல்வேலி வளாகத்தில் அல்லது 22 01 91 — 23-01 91 வரை கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீட அலுவலகத்தில் வேலை நேரங்களில் வேலைக்கழக விலைகளை எந்திர விவசாயிகளுடன் தொடர்பு கொள்ளவும்.

தனியார் ஒப்பந்தக்காரர்கள் ICTAD அல்லது ஏதாவது அரச நிறுவனத்தில் பதிவு செய்து இருப்பதோடு பின்வருவனவற்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

1. கிளிநொச்சி மாவட்டத்தில் ஏதாவது அரச நிறுவனமொன்றில் ரூபா 100, 000/- க்கு குறையாத குடிசார் ஒப்பந்த வேலையை பூர்த்தி செய்த ஆவணத்தின் பிரதி.
2. கிளிநொச்சி மாவட்டத்தில் ஒப்பந்தக்காரரின் தலைமை அலுவலகம் அல்லது கிளை அலுவலகம் அமைந்திருப்பதை உறுதிப்படுத்தும் ஆவணத்தின் பிரதி.

– பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
[சி-5638]

THE EXPRESS INSTITUTE — A BOON TO STUDENTS

1989 O/L பரீட்சையில் தவறிய மாணவருக்கு ஓர் அரிய வாய்ப்பு!

O/L 1991 விஷேட பரீட்சைக்கான

பகல் முழுநேர வகுப்பு

(காலை 8.00 - பி.ப 1.00)

தை 07 இல் ஆரம்பமாகி நடைபெறுகிறது.

இவ் வகுப்பு மாணவர்களும் கணித ஆசிரியர் திரு. வரதராஜனின் விசேஷ கணித (மீட்டல்) வகுப்பில் இலவசமாக கல்வி கற்க முடியும்.

(15486)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர், நீர்வேலி தெற்கு நீர்வேலி)

14 - 12 - 90 அன்று சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவர் ஸ்ரீமான் வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் சபிண்டீகரணம் எமது இல்லத்தில் 13 - 01 - 1991 ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணியளவில் நடைபெறும்.

இச் சபிண்டீகரண வைபவத்திலும், இதனை அடுத்து மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்பு கொண்டு அழைக்கின்றோம்.

இங்ஙனம்:

திருமதி தில்லையம்மா சங்கரப்பிள்ளை,
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.

'மேருசுதி',
நீர்வேலி தெற்கு நீர்வேலி.
(15509)

31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு:	இறப்பு:
28	14
—	—
09	12
—	—
1919	1990

சபாபதிப்பிள்ளை நாகராஜா

(இளைப்பாறிய கலால் உத்தியோகத்தர்)

கண்கள் இமையிழந்து கலங்கிடு மிங்கு
எங்கள் தலை தனை இழந்து விடோமே
எழுத்தறிவித்தீர் ஏற்றியும் வைத்தீர்
பெயர் சொல்லிடவே பெற்றிட்ட மக்கள்
துயர் கொண்டு கலங்குவரா தேற்றிட இங்கு
எவர் உள்ளரென்று ஏகினீர் ஐயா
நோயுற்றிருக்கவிலை நொடியிற் றந்தீர்
சேயர் செயலிழந்து சோர்வடைகின்றோம்.

குடும்பத்தினர், திருமதி நாகராஜாவும், பிள்ளைகளும், மருமக்களும்.

கொற்பதி வீதி,
கொக்குவில்.
(15223)

★ பற்றீஸியன் ★

தொழிற் கல்வி நிலையம்

அகில உலக கெயர் பகுதிநேர வேலை, கட்டுவேலை பயிற்சிகள்

அகில உலக கெயர் ஸ்தாபனத்துடன் (Care - International) இணைந்து எம்மால் நடாத்தப்படும். மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சி தகைமை:
15 வயதும் அதற்கு மேற்பட்டோரும், 8ஆம் வகுப்பும் அதற்கு மேற்பட்ட தராதரமும்.

பயிற்சிக் காலம்:
2½ மாதம் ஸ்தாபனப் பயிற்சி 10 மாத பயிலுனர் வேலையாளர் பயிற்சி.

கொடுப்பனவு:
ஸ்தாபன பயிற்சியின் போது மாதம் ரூபா 600 உம் 10 மாத பயிலுனர் பயிற்சியின் போது வேலைக்கப் பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும். அத்துடன் இலவச உபகரண பொறியுல வழங்கப்படும்.

சான்றிழ்கள்:
பயிற்சி நிலைய பயிற்சி சான்றிழ் தொழிற் டரீட்சை அடிப்படையில் தேசிய (அரசாங்க) தொழில் சான்றிழ் சர்வதேச ரீதியிலான கெயர் ஸ்தாபன சான்றிழ்.

இதர உதவிகள்:
பயிற்சி முடிந்தவர்களுக்கு சொந்தத்தில் முயற்சிகளை தொடங்க கெயர் ஸ்தாபனத்தின் மூலம் வழிவகைகள் செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்பங்கள்:

பதிவாளர்,
பற்றீஸியன் தொழில நிறுவனம்,
59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு 05 02 91க்குப் பிந்தாமல் நேரில் சமர்பிக்கப்பட வேண்டும்.

பதிவாளர்,
பற்றீஸியன் தொழில நிறுவனம்.
(சி-5643)

மரண அறிவித்தல்கள்

திரு. சின்னப்பு நவரட்ணம்

கந்தர்மடம் ஜெயசங்கா தக்கத் தொழிற்சாலை உரிமையாளர் சி நவரட்ணம் அவர்கள் 91-01 12ஆம் திகதியன்று காலமாகி விட்டார் அன்னார் பரலோக்ஸ் வரியின் அன்புக் கணவரும், தவமணிதேவி, காலஞ்சென்ற ஜெயபாலன், ஜெயதாஸ், ஜெயக்குமார் (கனடா), ஜெயக்குமாரி, ஜெயநிஸ்வரன், ஜெயசிறி (பிரான்ஸ்), ஜெயசங்கர், ஜெயசுந்தரன், ஜெயவசந்தன், சுதாகர் (யாழ். மத்திய கல்லூரி மாணவத் தலைவர்), முகுந்தன் (யாழ். மத்திய கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருணகிரிநாதன், மனோகரன், குலசேகரி, சித்திரா, நிர்மலாதேவி (கனடா), றெஜினா, மாலதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (13 1 91) இன்று ஞாயிற்றுக்கிழமை 11 மணி எவில் நடைபெறும். பூதவுடல தகனக்கிரியைக்காக கோப்பாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
ந. ஜெயதாஸ் (மகன்)

70, கலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(15514)

திருமதி அன்னமுத்து கந்தையா

கட்டுடை மாவிப்பாயைச் சேர்ந்த திருமதி அன்னமுத்து கந்தையா (செல்லம்) 12 - 01 - 91 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் கந்தையாவின் அன்பு மனைவியும் அம்பிகாதேவி (ஆசிரியை), பத்மாதேவி, சாரதாதேவி (ஆசிரியை), ஆகியோரின் அன்புத் தாயாரும் திரு. மாணிக்கவாசகர் (பம்பலப்பிட்டி), திரு. நவரத்தினம் (அராலி தெற்கு) திரு. செல்வரத்தினம் (கனடா), திரு. கப்பிரமணியம் (முருங்கன்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 13 - 01 - 91 காலை 10 மணியளவில் கட்டுடையில் நடைபெறும்.

தகவல்:
நா. கப்பிரமணியம்

6 ஆம் கட்டை,
கட்டுடை.
(15515)

இப்பத்திரிகை திரு. உதயன் பதிப்பகத்தால் [பிறைவேற்] விநியோகிக்கப்பட்டு யாழ்ப்பாணம், தாவடி வீதி 203/3 இல் உள்ள அச்சகத்தில் 13 - 1 - 1991 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org